மோசடி என்று சொன்னால்கூட, அரசியல் என்கிற அடைமொழி முன்னால் இருப்பதால், மோசடி என்பதன் வேகம் குறைந்து விட்டது என்பதான நான்காவது குறிப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் இப்படி நான்கு குறிப்புக்களைச் சொல்லியிருப்பதால், அவர்கள் சொல்லியபடி இருக்கிறதா இல்லையா என்று நானும் விதிகளைப் பார்த்து—நான் விதிகளை நுணுக்கமாகப் பார்க்கப்பட்டவன் என்பது எல்லோருக்கும் தெரிந்த காரியம்—திங்கட்கிழமை என்னுடைய முடிவை அறிவிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(i) இராமநாதபுரம் மேல் பகுதியை பஞ்சப் பிரதேசமாக அறிவித்தல்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : சபாநாயகர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டத்தில், மேல் பகுதியில் பருவமழை தவறியதால் அரசாங்கம் உடனடியாக இந்த மாவட்டத்தை பஞ்சப் பிரதேசமாக பிரகடனம் செய்து கட்டாயக் கொள்முதலை நிறுத்துவது பற்றி விவாதிக்க வேண்டி இச்சபையின் அலுவல்களை ஒற்றி வைக்கக் கோருகின்றேன்" என்ற தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்திற்கு, விதி 50, உள்விதி (8)-ன் படி, எனது இசைவைக் கொடுக்க மறுக்கிறேன்.

(ii) சிதம்பரம் வட்ட நிலச்சுவாந்தார்கள்—விவசாயக் கூலிகள் தகராறு.

* **திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன். "சட்டப் பேரவையின் விதிகளின் 42-வது பிரிவின்படி கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க இச்சபையின் அலுவல்களை ஒத்திவைக்கக் கோருகிறேன் :—

தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்ட எடையார் கிராமத்திலுள்ள நிலச்சுவாந்தார்களுக்கும் கூலி விவசாயிகளுக்கும் அறுவடைக் கூலி சம்பந்தமாக கடந்த 22—1—1968-ல் மாவட்ட கலெக்டர் முன்னால் ஏற்பட்ட ஒப்பந்தப்படி நிலச்சுவாந்தார்கள் கூலியைக் கொடுக்க மறுப்பதுடன், வெளியூர் ஆட்களை வைத்து போலீஸ் பந்தோபஸ்துடன் அறுவடை செய்து வருவது பற்றி விவாதிக்க".

இதைப் பற்றி இரண்டொரு வார்த்தைகளும் சொல்ல விரும்புகிறேன். 22—1—1968-ம் தேதி ஏற்றுக்கொள்ளப்பட்ட கூலியைக் கொடுக்க, அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விவசாயிகள் டெபுடி தாசில்தார் அலுவலகத்தின் முன்னால் உண்ணா